# <u>பணத்தின் ஆட்சியும், சூழ்ச்சியும்</u>

முகவுரை:

கடவுள் பாதி மிருகம் பாதி சேர்ந்து செய்த கலவை நான், மிருகம் கொன்று, மிருகம் கொன்று, கடவுள் வளர்க்க பார்க்கின்றேன் ஆனால், கடவுள் கொன்று, கடவுள் கொன்று, மிருகம் மட்டும் தானாய் வளர்கிறதே என்ற திரைப்பட பாடல் வரிகள் அனைவருக்கும் நினைவிருக்கலாம். இவ்வரிகள் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொருத்தமான வரிகளாக அமைகின்றன. ஏனென்றால், நாம் ஒவ்வொருவரும் நற்பண்புள்ள மனிதராகவே வாழ விரும்புகறோம். ஆனால், நம்முடைய மிருக மனத்தால் பல தீய செயல்களை செய்ய நேரிடுகிறது. இதனால் பல துன்பங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. இதற்கு காரணம் நம்முடைய மிருக மனம், பலம் பொருந்தியதாகவும், கடவுள் மனம், உறங்கி கொண்டிருப்பதாலும்தான். இந்த கடவுள் மனத்தை (தெய்வ மனம்) எவ்வாறு பலம் பொருந்தியதாக்க வேண்டும் என்பதை ஞானிகள் நமக்கு பல யோக முறைகளாக தந்திருக்கிறார்கள். அதில் ஞானயோகம் என்ற முறையானது 6–வது அறிவு அதாவது ஞானம் என்ற வாள் மூலம் இந்த மிருக மனத்தை வீழ்த்தும் முறையாகும். இதில் முதல் கட்டமாக பணம் என்ற மிகப் பெரிய ஆயுதம் மனிதனின் அசுர மனத்திற்கு உதவுகிறதா ? அல்லது தெய்வமனத்திற்கு உதவுகிறதா ? என்பதை ஆராய்வோமாக!

“பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்,” “ஈட்டி எட்டிய மட்டும் பாயும் பணம் பாதாளம் வரை பாயும், பணத்தால் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம் என்பது போன்ற பல கருத்துக்கள் எங்கும் நிலவுகின்றன. பணத்தால் ஈர்க்கப்படாத மனிதன் இருப்பதாகவே தெரியவில்லை. மேலும், ஒவ்வொரு மனிதனின் இறுதி இலக்கான **சுகமாக வாழ்தல்** என்ற இலக்கினை பணத்தால் மட்டுமே அடைய முடியும் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில் பணத்தால் அனைத்தையும் பெற்றுவிட இயலுமா ? என சற்று ஆழமாக சிந்திக்கையில், கீழ்ககாணும் சில கேள்விகளும் மனதில் எழுகின்றன.

1. பணத்தால் பூகம்பத்தை தடுத்து நிறுத்த முடியுமா ?
2. நெருப்புக்கு பணம் கொடுத்து, என்னை சுடாதே என ஆணையிட முடியுமா ?
3. புயல் காற்றை நிறுத்திவிட முடியுமா ?
4. பணத்தால் புத்தகத்தை வாங்கலாம். ஆனால் அறிவை வாங்க முடியுமா ?
5. பணத்தால் நோய் வராமல் தடுக்க முடியுமா ?
6. பணத்தால் முதுமை வராமல் தடுக்க முடியுமா ?
7. பணத்தால் இறப்பினை தடுக்க முடியுமா ?
8. பணத்தால் பயம் இல்லாமல் வாழ முடியுமா ?

9. பணத்தால் விபத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியுமா ?
10. குழந்தை வரத்தைப் பெற முடியுமா ?
11. பணத்தால் கரியநிற தேகம் வெள்ளை நிறமாக மாறுமா ?

இப்படி நாம் கேள்விகளை பக்கம் பக்கமாக அடுக்கிக் கொண்டே போகலாம். இன்னும் சற்று ஆழமாக சிந்தித்தால், பணத்தால் கீழ்கூறப்பட்டவைகளைப் போன்றவற்றைத்தான் பெற முடியும் என்று தோன்றுகிறது..

1. **நான்** என்னும் அகந்தை அதிகமாகிறது.
2. பெரும்பாலும் தீய செயல்கள் தேடி வருகின்றன.
3. செயல்களில், ஆசை மற்றும் எதிர்பார்ப்பு அதிகமாகிறது.
4. தீய நண்பர்களைப் பெற முடிகிறது.
5. போலியான அன்பைப் பெற முடிகிறது.
6. போலியான விசுவாகத்தைப் பெற முடிகிறது.
7. பயம் அதிகரிக்கிறது.
8. போலியான மதிப்பு, மரியாதையைக் கண்டிப்பாக பெற முடிகிறது.
9. தவறான தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட வைக்கிறது.
10. அதன் காரணமாக அதிக நோய்களைத்தான் பெற முடிகிறது.
11. மனதின் தாங்கும் சக்தி குறைகிறது. இதனால் சிறு ஏமாற்றத்தினால் கூட மனம் உடைகிறது. மாரடைப்பு, மற்றும் மன உளைச்சல் போன்ற நோய்கள் உருவாகின்றன.
12. பணக்காரர்களின் பிள்ளைகள் ஆடம்பரமாகவும், பொறுப்பற்றவர்களாகவும், தீய பழக்க வழக்கங்களுடனும், தந்தை எவ்வளவு சம்பாதித்திருந்தாலும் திருப்தி இல்லாமல், வெறுப்பை. க்ஷவளிப்படுத்துபவர்களாகவே உள்ளனர்.
13. பத்திரிக்கைகள் மற்றும் மக்களின் கண்கள் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதால், எச்செயலையும் சுதந்திரமாக இயல்பாக செய்ய இயலுவதில்லை.
14. ஒருவன் முதலில் ஏழ்மையில் இருந்தபோது கொண்டிருந்த கவலையை விட, பணம் ஈட்டிய பிறகு, தான் மீண்டும் ஏழ்மை நிலைக்கு சென்றுவிடக்கூடாது என்ற கவலை பல மடங்கு அதிகரிக்கிறது. அதாவது, தொடர்ந்து தன் அந்தஸ்தை கட்டிக்காக்க வேண்டிய கவலை, சாகும் வரை தொடர்கிறது.
15. வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால், எச்செயல் செய்தாலும் நிம்மதியற்ற நிலை ஏற்படுகிறது.

(உதாரணமாக) பணக்காரர் ஒருவர் ஒரு இரு சக்கர வாகனம் புதிதாக வாங்க நினைத்தால் எந்த மாடலையும் வாங்கும் தகுதி உள்ளதால் எதை வாங்குவது என முடிவு எடுப்பதற்குள் திணறிப் போய்விடுவார். ஒருவாறாக முடிவு செய்து, வாங்கியும் விடுகிறார். இதைக் கண்ட இவருடைய நண்பர்கள், இதை ஏன் வாங்கினாய்? இதை விட கொஞ்சம் கூட பணம் செலவழித்தால், நல்ல வண்டியாக வாங்கியிருக்கலாமே என கூறிவிட்டால் போதும், தான் வாங்கியதை அனுபவிக்காமல் புதிய வாகனத்திற்காக ஏக்கம் கொண்டு, வாங்கும் திறன் உள்ளதால் அதை வாங்கி இருக்கலாம், . இதை வாங்கி இருக்கலாம் என நிம்மதி இல்லாமல் இருப்பார். ஆனால், ஒரு ஏழை கஷ்டப்பட்டு ஒரு பழைய சைக்கிள் வாங்கினால், பெரு மகிழச்சியோடு அதை அனுபவிப்பார். அவரிடம் சென்று புதிய சைக்கிள் நீங்கள் வாங்கியிருக்கலாம் என யாராவது கூறினால், இதை வாங்குவதற்கு நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும். இந்த சைக்கிளே போதும் எனக் கூறி நிம்மதியாகவே அதை அனுபவிப்பார்.

16. புலன்கள் நமது கட்டுப்பாட்டில் இருந்தால் தான் சுகத்தை அனுபவிக்க முடியும். ஆனால் பணக்காரர்கள் பெரும்பாலோர் புலன்களுக்கு அடியைாக உள்ளார்கள். இதனால் ஏற்படும் கஷ்டங்கள் தான் எத்தனை? எத்தனை?

17. ஒருவன் தன் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்குக் கூட பணம் இல்லை என்றால் நாம் அவரை ஏழை என அழைக்கிறோம். ஆனால், ஆச்சரியம் என்னவென்றால் எவ்வளவு பணம் சேர்ந்தாலும் அதற்கு ஏற்றாற்போல் ஆசை பெருக, அதனால் தேவைகள் பெருக, இவரும் பற்றாக்குறையால் தவிப்பதுதான். அதனால் ஒரு கடைக்கு காய் வாங்கச் சென்றால், ஒரு கிலோ காய் 10 ரூபாய் என்று கடைக்காரர் சொன்னால், ஐயா, நான் பணக்காரன், அதனால் 2ரூபாய் அதிகமாக வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறுவதற்கு பதிலாக 2 ரூபாய் குறைக்க முடியுமா? என ஒரு ஏழையைப் போல் கேட்க வேண்டிநிலை.

    மேற்கூறிய இவை அனைத்தும் மனிதனுக்கு துக்கத்தையும், சுகவீனத்தையுமே அளிக்கிறது. சான்றோர்களும், ஞானிகளும் சுகம் என்பது மனம் சம்பந்தப்பட்ட விசயம். சுகத்தை அனுபவிப்பது மனம், ஆதலால் ஒருவன் சுகம் பெற வேண்டுமானால் முதலில் மனம், பண்பட (பக்குவப்பட) வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்கள். அவ்வாறு பார்க்கும் போது பணத்தின் உதவியால் மனதை பழுதாக்கத்தான் முடியுமே தவிர, பண்படுத்த முடியாது என்றே தெரிகிறது.

பணம் உள்ளவனை, பணபலம் படைத்தவன் என்று கூறுகிறோம். ஆனால் இவ்வாறு ஆராய்ந்து பார்த்தால் பணபலம் என்ற சொல்லே பொருளற்றதாகிறது. ஏனெனில் பணத்தால் பலவீனம் மட்டுமே இருக்கும் போது, பணம் உள்ளவர்களை, பண பலவீனம் உள்ளவர்கள் எனக்கூறுவதே பொருத்தமாகும். பணத்தால் பலத்தை பெறமுடியாது எனவும், பண்பட்ட, பக்குவப்பட்ட, தூய்மையான மனத்தால் மட்டுமே பலத்தை அடைய முடியும் எனவும், பணத்தால் இவையெல்லலாம் முடியுமா? என்று நாம் 1–ம் பக்கத்தில் எழுப்பிய அத்தனை கேள்விகளுக்கும் விடையாக மனோபலத்தால் மட்டுமே

முடியும் என்பதை வெகுகாலமாகவே ஞானிகள் நிரூபித்தும் வருகிறார்கள். ஏன் ? பொதுவாக பண பலவீனம் உள்ளவர்களே (பணக்காரர்களே) இத்தகைய ஞானிகளின் கால்களில் விழுந்து. தங்கள் குறையை தீர்க்கக் கோருகிறார்கள் என்றால் பணத்தின் பெருமையை, தன்மையை நன்கு உணர வேண்டும். முற்றிலும் நமக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய ஒன்றை எண்ணித்தான் நாம் இத்தனை நாட்களாக ஏக்கம் கொண்டோம் என்ற நம் அறியாமையை நன்கு உணர வேண்டும்.

பணம் அதிகமானால் ஏற்படும் விளைவுகளை இதுவரை ஆராய்ந்தோம். இனி ஒருவன் ஏழையாகவே வாழ்வதானால் ஏற்படும் விளைவுகளையும் சற்று ஆராய்வோம்.

1. நான் என்ற அகந்தை குறைகிறது.
2. தீய விசயங்கள் தேடி வருவதில்லை. அதனால் ஆசை குறைகிறது.
3. பயம் குறைகிறது.
4. ஆசைகள் இருந்தாலும், இது நிறைவேறாது என உணர்வதால் ஆசைகள் இயல்பாக குறைகிறது.
5. மனோதிடம் வளர்கிறது. ஏமாற்றத்தை சுலபமாக எதிர்கொள்ள முடிகிறது.
6. உழைப்பதாலும், தீய பழக்கவழக்கங்கள் குறைவாக உள்ளதாலும், உடல் நலம் காக்கப்படுகிறது.
7. கிராமத்திலும் ஏழைகள் உள்ள இடத்திலும் தான் அன்பும், கைம்மாறு எதிர்பாராமல் உதவும் குணமும் காணமுடிகிறது.

இவ்வாறு நாம் மேற்கூறியவற்றை பார்க்கும் போது மனதை பண்படுத்துவதற்காக ஞானிகள் கூறிய எந்த யோக முறையையும் பயிலாமல், ஏழையாக வாழ்வதால் மட்டுமே, மனம் ஓரளவிற்கு செம்மையாகிறது என்றால், ஏழைகள், தங்களுக்கு இறைவன் மிகப்பெரிய கருணை காட்டுகிறான் என்பதை உணராமல் பணத்தின் மீது நாட்டம் கொண்டுள்ளார்கள். அதே போல் பணக்காரர்கள் தாங்கள் கீழான நிலையில் உள்ளோம் என்று உணராமல் மேலும் மேலும் கீழ்நிலைக்குச் செல்ல (பணம் சேர்க்க) ஆசைப்படுகிறார்கள். இதைத்தான் ஞானிகள் அறியாமை என கூறுகிறார்கள். ஞானதேவர் என்ற ஞானி, நாற்றம் நாறும் சீழில் பிறந்து அதிலேயே உழன்று கிடக்கும் புழுக்கள், தன் நிலையை உணர்ந்து அதை விட்டு வெளியே வர முயற்சிக்காதது போல் இது உள்ளது என உதாரணம் கூறுகிறார். இந்த உதாரணத்தை கேட்ட ஒரு நண்பர், உமக்கு வேண்டுமானால் சுகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் புழுவிற்கு சீழில் சுகம் இல்லாமலா அது சீழில் இருக்கிறது. எருமைக்கு சுகம் இல்லாமலா அது சாக்கடையில் இறங்குகிறது. அதுபோல் பணக்காரனுக்கு, பணத்தால் சுகம் இருப்பதால்தான் அவன் மேலும் மேலும் பணத்தை ஈட்டுகிறான் என்றார். நீங்கள் மேற்கண்ட உதாரணத்தை தவறாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அதாவது புழுவும் சரி, எருமையும் சரி சீழினாலும் சாக்கடையாலும் மிகுந்த துன்பத்தைத்தான் அனுபவிக்கிறது, ஆனால் இத்துன்பத்திற்கு காரணம், தான்

சாக்கடையில் இருப்பதால்தான் என்ற அறிவு இல்லாமலும், பெரிய சாக்கடையில் இறங்கினால் இத்துன்பம் நீங்கிவிடும் என்ற அறியாமையில் உள்ளதையே இங்கு ஞானதேவர் இவ்வாறு விளக்குகிறார். ஏனென்றால், ஒரு 10 ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பவரிடம் சென்று உங்கள் துயரம் என்று தீரும் ? என கேட்டால் மேலும் சில ஆயிரங்கள் வந்தால் தீரும் என்பார். 10 லட்சம் ரூபாய் சம்பாதிப்பவரிடம் சென்று உங்கள் துயரம் என்றைக்கு தீரும் என கேட்டால், மேலும் சில லட்சங்கள் வந்தால் தீரும் என்பார். இப்படியே கோடி கோடியாக சம்பதிப்பவர்களும் கூட கூறுகிறார்கள். எனவே தாங்கள் ஏற்கனவே வைத்துள்ள பணம்தான் துன்பத்திற்கு காரணம் என உணராமல், மேலும் பணம் கிடைத்தால் துன்பம் நீங்கிவிடும் என நினைக்கும் அறியாமையைத் தான் மேற்கண்ட உதாரணம் மூலம் விளக்குகிறார். மேலும் தாமரைப் பூவின் மகரந்தத்தில் மோகம் கொண்ட வண்டானது, தனக்கு ஒரு மரத்தை துளையிடும் சக்தி இருந்தும், அறியாமையால் வெளியே வர முயற்சி மேற்கொள்ளாமல் தன் உயிரையே விட்டுவிடுகிறது. இதைப்போல் பணத்தின் மீது உள்ள மோகத்தால், மனிதர்கள் தங்கள் உயிரையே இழந்து கொண்டு இருக்கிறோம் என்பதை அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்று இன்னொரு உதாரணம் மூலமும் கூறுகிறார்.

எந்த அளவிற்கு நாம் ஒவ்வொருவரும் அறியாமையில் இருக்கிறோம் என்பதை இதுவரை பார்த்தோம். இவ்வளவு தெளிவாக நாம் அறியாமையை பெரியோர்கள் சுட்டிக் காட்டினாலும், அதை ஒப்புக் கொள்ள நம் மனம் இடம் தருவதில்லை. உண்மையில் நடந்த கீழ்க்கண்ட ஓர் உரையாடலை படித்தபின் , நம் மனம் நம் அறியாமையை ஒப்புக் கொள்ளுமா எனப்பார்ப்போம்.

ஒரு தொழிலதிபர் தனது தொழிலை, நிறுத்திவிட்டு தனது எந்திரங்களை விற்றுவிட நினைத்து, ஒரு புரோக்கரை அழைத்துப் பேசும்போது, அவர்களுக்குள் நடந்த உரையாடல்:

புரோ : ஐயா, எதற்காக எந்திரங்களை விற்கிறீர்கள் ?

தொ.அ. : தொழில் செய்தது போதும், மேலும் பணத்துக்காக சிரமப்பட வேண்டாம் என்பதற்காகவும் தான்..

புரோ : (தொழில் அதிபர்மேல் கரிசனம் கொண்டு) பொதுவாக, நான் எனது கதையை யாரிடத்திலும் கூறுவதில்லை ஐயா! உங்களிடம் ஏனோ எனது கதையை கூறத்தோன்றுகிறது.

தொ.அ. : கூறுங்கள்

புரோ : நான் ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். என் அப்பா ஒரு குடிகாரர். அவர் சம்பாதிக்கும் பணம் அவர் குடிப்பதற்கே போதாது. எனவே, என்னால் படிக்கவும் முடியாமல் போயிற்று. சிறு வயதிலேயே சம்பாதிக்க வேண்டிய நிலை. உதவி செய்வதற்கு யாருமே இல்லை. ஆதலால், எனக்குள் திடமாக முடிவு செய்தேன். சூழ்நிலை எதுவாயினும் ஒருநாள் நான் ஒரு நல்ல நிலைமைக்கு வரவேண்டும் என்பதுதான் அது. அன்று முதல் மிகக் கடுமையாக உழைத்தேன். இன்று உங்களிடத்தில் மறைக்காமல் கூறுகின்றனே.

இப்போது ஒரு நாளைக்கு ரூபாய் 2000 முதல் 4000 வரை நான் சம்பாதிக்கிறேன். எனவே கஷ்டத்திற்கோ, சிரமத்திற்கோ நான் பயப்பட வேண்டியதில்லை. போராடினால் கண்டிப்பாக வெற்றி பெறலாம். (இக்கதையை கூறி முடிப்பதற்குள் அவருடைய செல்போனிற்கு 10 போன்கால்கள் வந்துவிட்டன. அவர் தொழில் அதிபரிடமும், போனிலும் மாறி மாறித்தான் பேசவேண்டியதிருந்தது.)

தொ.அ. : நீங்கள் கூறுவதை நான் ஒப்புக் கொள்கிறேன். நீங்கள் அதிகமாக சம்பாதிக்கிறீர்கள் என்பதற்கு உங்களுக்கு வந்த போன்கால்களே சாட்சி என்றாலும், எனக்கு ஒரு சந்தேகம். அதாவது, அதிகம் சம்பாதிக்கிறீர்கள் என கேட்பதற்கு சந்தோசமாக இருந்தாலும் அதையே நான் சுகமாகவும், ஆனந்தமாகவும் சம்பாதிக்கிறேன் என நீங்கள் கூறினால் மேலும் மகிழ்ச்சி அடைவேன். எனவே, இந்த பணத்தை கஷடப்பட்டு சம்பாதிக்கிறீர்களா ? அல்லது சுகமாக சம்பாதிக்கிறீர்களா ? என்று கூறுங்களேன்.

புரோ : எதுவும் தெரியாதது போல் கேட்கிறீர்களே ? சற்று முன்தான் பார்த்தீரே. எத்தனையோ போன்கால்கள் வந்தது என்று. நாய் பிழைப்பு சார் இது. இரவு 1 மணி, 2 மணிக்கு கூட போன் செய்வார்கள். மேலும், எத்தனை பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியுள்ளது. அதனால் கஷ்டப்பட்டுதான் சம்பாதிக்கிறேன். மேலும் நான் மட்டும் அல்ல, யாராக இருந்தாலும் கஷ்டப்பட்டால்தான் சம்பாதிக்க முடியும்.

தொ.அ : எதற்காக சம்பாதிக்கிறீர்கள் எனக் கூறுங்களேன் ?

புரோ : என்ன கேள்வி இது ? சுகமாக வாழ்வதற்கும், வாழ்க்கையை அனுபவிப்பதற்கும்தான். இது அனைவருக்கும் தெரிந்த அறிந்த விசயம்தானே.

தொ.அ : 24 மணி நேரமும் பணம் சம்பாதிப்பதற்கே செலவழித்து விட்டால் சுகத்தை அனுபவிப்பதற்கு நேரம் எங்கே உள்ளது ? எந்த நேரத்தில்தான் சுகத்தை அனுபவிக்கிறீர்கள் என்று கூறுங்களேன்.

புரோ : அது, இளமையில் நன்றாக கஷ்டப்பட்டு, நிறைய சம்பாதித்துவிட்டால் கடைசி காலத்தில் சுகமாக வாழலாமே!

தொ.அ : கண், காது உட்பட ஐந்து புலன்களும் செயல் இழந்து கொண்டிருக்கும் போது சுகத்தை எவ்வாறு அனுபவிக்க முடியும் என்ற கேள்வி எழுந்தாலும், கடைசி காலம் எது என்பது காலன் (எமன்) கையில் உள்ளது என்ற போதிலும், நீங்கள் நினைப்பது போலவே கடைசி காலம் வரை ஆரோக்கியமான புலன்களுடன் வாழ்வதாகவே வைத்துக் கொண்டாலும், என்னுடைய இன்னொரு சந்தேகத்திற்கு விளக்கம் அளிக்க வேண்டுகிறேன். அதாவது, இன்றைய சூழ்நிலையில் உங்களுடைய ஒருநாள் வருமானம் ரூபாய்.4,000/- என்றால் உங்களுடைய 50வது, 60வது வயதில்

உங்களுடைய தொழில் இதே வேகத்தில் வளர்ச்சி அடைவதாக வைத்துக் கொண்டாலும் அப்போது ஒருநாள் வருமானம் குறைந்தது 50,000/- ரூபாய் இருக்கும் என நான் எதிர்பார்க்கலாமா ?

புரோ : (சில வினாடிகள் யோசித்துவிட்டு....) சார், நான் இப்போது ஒப்புக் கொள்கிறேன். என்னால் சாகும்வரை சுகத்தை அனுபவிக்க முடியாதுதான் என்றாலும் என் குடும்பம் சுகமாக வாழ்கிறதே! அதற்காக என் சுகத்தை தியாகம் செய்வதில் தவறு ஒன்றும் இல்லையே ? சிறுவயதில் நான் பட்ட கஷடங்களை என் மகன் அனுபவிக்க வேண்டியதில்லையே. இப்போது அவனை கான்வென்ட் பள்ளியில் படிக்க வைத்துள்ளேன். மேலும், குடும்பத்துக்கு தேவையான அனைத்து பொருட்களும் (T.V.., Fridege etc.,) உள்ளதால் என் குடும்பம் சுகமாகத்தானே இருக்கிறது.

தொ.அ : ஒரு பேச்சுக்கு அல்லது ஒரு உதாரணத்திற்கு, உங்கள் தந்தையார் கடைகள் கட்டி அவைகளை வாடகைக்கு விட்டு மாதம் ஒரு 50,000 வருமானம் வரும் சூழ்நிலையில் நீங்கள் வாழ்ந்திருந்தால், நீங்கள் சற்று முன்னர் கூறியது போல் ஒரு திறமையான புரோக்கராக இருந்திருப்பீரா ? அல்லது வேறு எப்படி இருந்திருப்பீர் ?

புரோ : (சற்றும் தாமதிக்காமல்), நான் ஒரு டர்டியாக (Dirty) (உருப்படியில்லாத, உதவாக்கரையாக) ஆகி இருப்பேன். இன்று எனக்கு சிகரெட், மது, மாது என எந்த பழக்கமும் கிடையாது. ஆனால், நீங்கள் குறிப்பிட்டது போல் வாழ்ந்திருந்தால் அனைத்து தீய பழக்கங்களுக்கும் அடிமை ஆகி இருப்பேன்.

தொ.அ : அப்படியென்றால், உங்கள் மகனை ஒரு டர்டி ஆக்குவதற்குத்தான் நீங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள். அப்படித்தானே!

இதைக் கேட்ட சில வினாடிகளுக்கு பிறகு சரேலென இருக்கையை விட்டு எழுந்தார். சம்பாதிப்பவன் எல்லாம் முட்டாள்கள் அல்ல. இரண்டு நாளில் நான் எதற்கு சம்பாதிக்கிறேன் என்ற விளக்கங்களுடன் வருகிறேன் என்று கூறிவிட்டு விறுவிறு என்று நடக்க ஆரம்பித்தார்.

தொ.அ : கடைசியாக ஒரே ஒரு கேள்வி இன்று வரை நீங்கள் எதற்கு சம்பாதிக்கிறோம் எனத் தெரியாமலேயே சம்பாதித்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீரா ?

புரோக்கர் பதில் கூறாமல் சென்று விட்டார்.

மேற்கண்ட இவ்வுரையாடலில் உள்ள புரோக்கரின் நிலையில்தான் நாம் அனைவரும் கஷ்டப்பட்டு பணம் சம்பாதிக்க முயற்சித்து வருகிறோம்.

மிகச்சிறிய அல்ப விஷயங்களுக்குக் கூட ஏன் ? எதற்கு ? என கேள்வி கேட்கும் நாம் (உதாரணமாக: டெண்டுல்கர் இன்றைய போட்டியில் ஆடமாட்டார் என செய்தி வந்தாலோ அல்லது நிர்ணயித்த தேதியில் திரைப்படம் திரைக்கு வரவில்லை என்றாலோ மனக்குழப்பம் அடைகிறோம்) வாழ்க்கையை முழுவதும் சம்பதிப்பதற்கே தியாகம் செய்யும் விசயத்தில் ஏன் ? என்ற கேள்விக்கு விடை தெரியாது என்றால் அதை நாம் அறியாமை என ஒப்புக் கொள்வதில் வெட்கப்பட வேண்டியதில்லை.

நாம் அறியாமையில் வாழ்கிறோம் என்பதை அறிய நேர்ந்தால் நாம் உண்மையில் சந்தோசப்பட வேண்டும். எவ்வளவு முட்டாளாக வாழ்ந்திருக்கிறோம் என்று எண்ணி ஆச்சரியப்பட வேண்டும். ஏனென்றால், முதலில் நாம் அறியாமையில் உள்ளோம் எனத் தெரிந்தால்தான், நாம் அறிவாளி ஆக முடியும். ஆனால், நாம் அறியாமையில் வாழ்கிறோம் என்பது அறிய தேர்ந்தால் அதை எண்ணி பயப்படவோ அல்லது வருத்தப்படவோ தேவையில்லை. ஏனென்றால், மேல்கூறிய அந்த புரோக்கர் கதையில் வந்த புரோக்கர் மீண்டும் தொழில் அதிபரை சந்திக்க வரவேயில்லை. பின் ஒரு மாதம் கழித்து தற்செயலாக தொழில் அதிபர் சற்று தூரத்தில் இருந்த புரோக்கரை பார்த்து அழைக்க, அவர் இரு கைகளையும் கூப்பி அங்கிருந்து மறைந்து விட்டார். அதாவது, எங்கே நம் அறியாமை விலகி அறிவாளி ஆகிவிடுவோமோ என்று அருகில் வரவே பயப்படுவாரானால், அறியாமையை என்னவென்று சொல்வது ?

ஒவ்வொருவரும் எதற்காக சம்பாதிக்கிறார்கள் ? என ஆழமாக ஆராய்ந்தால், பணம் ஈட்டுகிற ஒவ்வொருவரும் துன்பத்தைத்தான் அனுபவிக்கிறார்கள் என்ற போதிலும், இந்த உண்மையை தங்களைச் சுற்றி உள்ளவர்கள் தங்களின் அறியாமையினால் உணராமல், இவர் பல போகங்களுடன் சுகத்தில் வாழ்வதாக நினைத்து இவர் மீது ஏக்கம், போட்டி, பொறாமை கொள்கின்றனர். இதை பணம் ஈட்டுபவர் பெருமையாகவும், கௌரவமாகவும் நினைத்துத்தான் மேலும் மேலும் பணம் ஈட்டுகிறார் எனத் தெரிகிறது. அறியாமையில் உள்ளவர்கள் அதாவது சிலர் உண்மை தெரியாமல் தங்களை பெருமையாக கருதுவார்கள் என பணம் ஈட்டுவதும் அறியாமையே.

**இதையே ஞானதேவர் ஒரு உதாரணம் மூலம் சிறப்பாக விளக்குகிறார்.**

ஒரு முகம்பார்க்கும் கண்ணாடி நினைத்துக் கொண்டதாம், **"**என்மேல் மக்களுக்குத்தான் எவ்வளவு பிரியம். என்னைப் பார்க்காமல் ஒருநாள்கூட அவர்கள் இருப்பதில்லை. என்னை அடிக்கடி சுத்தம் கூட செய்து வைக்கிறார்கள்**"** என எண்ணி பெருமைப் பட்டுக் கொள்வது எவ்வளவு மடத்தனமோ அவ்வளவு முட்டாள்தனம் ஒருவன் பணம் இருந்தால் தன்னை மற்றவர்கள் மதிப்பார்கள் என எண்ணுவதும் என்று விளக்குகிறார்.

இவ்வாறு பலவற்றையும் நாம் ஆராயும் போது, இவ்வளவு அறியாமை நம்மிடம் ஏன் வந்தது ? எனக் கேள்வி கேட்க தோன்றும். இதற்கு விடை என்னவாக இருக்கும் ? நம் அறிவை பயன்படுத்தாதே நம் அறியாமைக்கு காரணம்.. நாம் ஏன் நம் அறிவை பயன்படுத்தவில்லை என்றால்,

1. அறிவை பயன்படுத்துவதில் சோம்பேறித்தனம்.

2. மற்றவர்கள் அறிவை பயன்படுத்தித்தான் எந்த ஒரு செயலையும் செய்வார்கள். அதனால் எதற்கு வீணாக நம் அறிவை பயன்படுத்த வேண்டும் எனக்கருதி எல்லோரும் செய்யும் செயலை இவரும் செய்வது, ஒவ்வொருவரும் இவ்வாறு நினைத்து விட்டதால், இறுதியில் ஒருவர் கூட அறிவை பயன்படுத்தாமல் அனைவரும் அறியாமையில் வாழவேண்டிய நிலை. அதனால்தான் ஏன் இதைச் செய்கிறாய்? எனக் கேட்டால் பெரும்பாலும், எல்லோரும் செய்கிறார்கள் அதனால் நானும் செய்கிறேன் என்ற பதில் வரும்.

ஏனவே, இறைவன் ஒவ்வொருக்கும் வழங்கியுள்ள சக்தி வாய்ந்த அறிவை பயன்படுத்தி அறியாமையயை நீக்குவோம்.

இவ்வாறு அறியாமையை நீக்கிய வரலாறு படைத்த ஞானிகளில் உதாரணமாக புத்தர் (ராஜ்ஜிய போகத்தில் வாழ்ந்தவர்) பட்டினத்தார் (அதிக பணம் படைத்தவர்) சிவானந்தர் (மருத்துவர் மற்றும் பணம் படைத்தவர்) என்று பலரைக் கூறிப்பிடலாம். இவர்களெல்லாம் தங்களின் அறியாமை விலகிய மறுகணம் செய்த முதல் காரியம் என்ன தெரியுமா? அனைத்தையும் துறந்து, ஏழ்மையில் (பிச்சை எடுத்து) வாழ்ந்தது தான். எனவே மனதை செம்மைப்படுத்த இந்த ஞானிகள் எடுத்து வைத்த முதல்படியே ஏழ்மையில் வாழ்தல் என்பதுதான். எனவே ஒவ்வொருவரும் தங்களின் உண்மையான நிலையினை உணர்ந்து, அதாவது ஏழைகள் தங்கள் மனதினை சுலபமாக பண்படுத்த முடியும் என்பதை உணர்ந்து, சந்தோசமாக அவ்வழியில் ஈடுபட வேண்டும். மேலும் செல்வந்தர்கள் தங்களின் நிலையினை எண்ணி கர்வம் கொள்ளாது, மனதை செம்மைப்படுத்த தாங்கள் பெரிதும் சிரமப்பட வேண்டும் என உண்ரந்து செயல்பட வேண்டும்.

பணத்தால் ஒரு நன்மை கூட இல்லை என்பதல்ல உண்மை. பணத்தால் நன்மை பல உண்டு எனினும், அதை பண்பட்ட மனத்தால் மட்டுமே அனுபவிக்க முடியும் இல்லையேல் தீமையே நிலவும்.

**புத்திசாலி எப்போதும் தனது அத்யாவசிய தேவைக்கு மட்டுமே சம்பாதிப்பான்.**

ஒரு வாள் சுற்றத் தெரியாத ஒரு போர் வீரனிடம் ஒரு நீண்ட வாளை கொடுத்து அனுப்பினால் அது அவனுக்கு உதவுவதற்கு பதிலாக அவன் தலையை அவனே வெட்டிக் கொள்வதற்கு ஏதுவாகி விடுவது போல், பண்படாத மனதிடம் இருக்கும் பணம் செயல்படுகிறது. எனவே, ஒரு வாளை நாம் பெறுவதற்கு முன்னால், அதை எவ்வாறு சுழற்றவது என்பதைத்தான் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். அது போலவே, நாம் ஒவ்வொருவரும் பணம் சம்பாதிக்க ஆசைப்படுவதற்கு முன்னால், பண்பட்ட மனதை பெறவே ஆசைப்பட வேண்டும்.

பண்பட்ட மனம், பணத்தை எவ்வாறு நன்மையாக கையாளும் என்பதை ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறும் ஓர் உதாரணம் முலம் உணரலாம்.

கிணற்றில் நீர் ஊற்றானது எவ்வளவு வேண்டுமானாலும் சுரக்கலாம். ஆனால், அனைத்தையுமே இறைத்துவிட வேண்டும். இல்லையேல், அவை நஞ்சாக மாறிவிடும் என்று கூறுவார். எனவே எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் அல்லது வைத்திருந்தாலும் அவை அனைத்தையுமே பொதுநலனுக்காக

செலவழித்துவிட வேண்டும். இல்லையேல், அப்பணம் நஞ்சாக மாறி, நம்மை நாசம் செய்துவிடும்.

இறுதியாக, இப்புத்தகத்தை படிக்கும் பலர் தங்கள் அறியாமையை உணர்வார்களானாலும், ஒருவர் ஒரு பைத்தியக்காரனிடம் சென்று, நீ ஒரு அறிவுள்ள மனிதன் என அறிவுரை கூறுவதால் எப்பலனும் ஏற்படாது, பைத்தியமாக பார்த்து தன்னைத்தானே உணராதவரை எவ்வாறு பைத்தியம் தெளிவதில்லையோ, அவ்வாறே நாமேதான் நம் அறியாமையை நீக்க வேண்டும்.

ஏனெனில், நம்மில் சிலர் மிகுந்த பணமோகம் உள்ளவராக இருந்தும், இப்புத்தகத்தை படித்த பிறகு எந்த சலனமும் இல்லாமல் இருப்பார்கள். அவர்களிடம் சென்று, இந்தப் புத்தகத்தை படித்தீர்களா ? எனக் கேட்டால், ஆம், படித்தேன். உண்மையை உள்ளபடியே அற்புதமாக விளக்கப்பட்டுள்ளது என்பார்கள். அப்படியானால் நீங்கள் இனி பணத்திற்கு ஆசைப்படமாட்டீர்களா ? எனக் கேட்டால், வேதாந்தம் படிப்பதற்கும், பேசுவதற்கும்தான் உதவும், நடைமுறை வாழ்வுக்கு பணம்தான் அவசியம் என்பார்கள்.

இவர்களைப் போல் பலர் வேதங்களையும், ஞானிகளின் புத்தகங்களையும் கரைத்து குடித்திருந்தாலும், இவ்விசயங்களை பிரச்சாரம் செய்வார்களே தவிர, நடைமுறை வாழ்க்கையில் மிகப்பெரிய மூடர்களாகவே வாழ்வார்கள். இவர்களின் அறியாமையை இவர்களே அறியவில்லையென்றால் படைத்த ஆண்டவனாலும் கூட இவர்களைத் திருத்த முடியாது.

**எனவே நாம் ஒவ்வொருவரும் நம் அறியாமையை அகற்றி ஆனந்தமாக வாழ்வோம்.**

குறிப்பு:

**1. சிவன் சொத்து குல நாசம் : இதற்கு உண்மையான அர்த்தம் தாங்கள் அறிந்திருக்கிறீர்களா ?**

மேலோரின் இவ்வுரையை பலரும் தவறாக புரிந்து கொள்கிறார்கள்.

சிவன் யார் ? சிவன் சொத்து எது ? என சிந்தித்தால் இதன் உண்மைப் பொருள் விளங்கும். சிவன் யார் ? என்பதை தாயுமானவர், எங்கு எங்கு பார்த்தாலும் எவ்வுயிருக்கும் அவ்வுயிராய் அங்கு அங்கு இருப்பது நீ (சிவன்) அன்றோ பராபரமே என்றும், எத்திக்கும் தான் (சிவன்) ஆகி என் இதயத்தே ஊறி தித்திக்கும் ஆனந்தத்தேனே பராபரமே என்றும் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைகின்ற தேஜோமாயனந்தமே என்றெல்லாம் பாடுகின்றார். சர்வம் சிவமயம் என்பது எல்லோரும் அறிந்த வாக்கு. அப்படியெனில், இவ்வுலகில் உள்ள அனைத்தும் அல்லது இவ்வுலகமே சிவன் சொத்து என்றுதான் அர்த்தம்.

சிவன் சொத்தை சிவனுக்கு அன்றி தவறாக பயன்படுத்தினால் ஏற்படும் விளைவினைத்தான் இங்கே நாசம் என்று கூறப்படுகிறது. ஏனவே, நாம் ஒவ்வொருவரும் வைத்துள்ள பொருள் அனைத்தும் சிவனுக்குரியதே. அதை சிவனுக்கு மட்டுமே பயன்படுத்துவது என்றால், அனைத்தும் சிவம் ஆதலால் அதை அனைவருக்கும் பொதுவாக பயன்படுத்த வேண்டும் எனப் பொருள்.

அதாவது பொது நலனுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதை விடுத்து சுயநலத்துக்கோ, தனிமனிதனின் சுகத்திற்கோ பயன்படுத்தினால் அவன் குலத்துடன் நாசமடைகிறான் என்று கூறுகிறது.

2.. **அருளில்லார்க்கு அவ்வுலக மில்லை பொருளில்லார்க்**
**இவ்வுலக மில்லாகி யாங்கு. குறள்.**

இதன் உண்மைப்பொருள் என்ன ?

மகான்களின் வாக்கு ஆப்த வாக்கியம் என்று அழைக்கப்பட்டு, அது இறைவாக்காகவே கருதப்படுகிறது. இதை குறை கூறுவதற்கு மனிதனுக்கு தகுதியே கிடையாது என்று கூட கூறலாம். ஆனால், இக் குறளின் உண்மைப்பொருள் என்ன ?

**அசுர மனம் உள்ளவர்க்கு இவ்வுலகம் இல்லை.**

**தெய்வமனம் இல்லாதார்க்கு பேரானந்த உலகம் இல்லை.**

அதாவது அருள் என்பது தெய்வமனம் பொருந்தியவர்களுக்கே கிடைக்கிறது. அவர்கள் ஆனந்தமாக வாழ்வார்கள் என்றும், அடுத்ததாக பொருள் இல்லார்க்கு என்ற இடத்தில் எந்த பொருளை குறிப்பிடுகிறார் என சற்று சிந்தித்தால் உண்மை புரியும். உலகில் எத்தனை கோடி பொருட்கள் இருந்தாலும் அவைகளை இருக்கிறதா ? என்று உணர்வதற்கும் அனுபவிப்பதற்கும் முக்கியமாக ஐந்து பொருட்கள் தேவை. அவை நமது ஐம்புலன்கள் ஆகும். எனவே, இந்த இடத்தில் பொருள் என்பது நமது ஐந்துபுலன்களையே குறிக்கும். அனைவரிடத்திலும்தான் இந்த புலன்கள் இருக்கின்றனவே என்றால், நமது கட்டுப்பாட்டில் நாம் விரும்பியபடி ஒரு பொருளை பயன்படுத்த முடியும் என்றால்தான் அது நம்முடையதாகும், ஆனால், நம் கண்களை எதை பார்க்கக் கூடாது என ஆணையிடுகிறோமோ அதைத்தான் பார்க்கிறது. நாக்கை புலால் உண்ணாதே என ஆணையிட்டால், அதைத்தான் உண்ணுகிறது. ஏனவே, நமது கட்டுப்பாட்டில் இல்லாத புலன்கள் நம்மிடம் இருப்பதாக நினைத்தால் அது தவறாகும். மேலும், புலன்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் மனதை அசுர மனம் என்று அழைக்கிறோம். ஏனவே, அத்தகைய மனம் உள்ளவர்க்கு இந்த உலகமும் இல்லை என்கிறார். மேலும், அருளுடைமை என்ற அதிகாரத்தில் முதல் குறளாக,

**அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம்**
**பூரியார் கண்ணுமுள.**

என்று பொருட் செல்வத்தை இகழ்கிறார்.

குறிப்பு:

இந்த புத்தகத்தை தாங்கள் படிப்பதோடு நிறுத்திவிடாமல், வாழக்கையிலும் செயல்படுத்தி மன நிம்மதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்த்திட மனதார வாழ்த்துகிறோம்.

மேலும் உங்களுக்கு மனக்கஷ்டங்கள் ஏற்படும் சமயத்தில் இந்தப்புத்தகத்தை மீண்டும் ஒருமுறை படித்தால் கண்டிப்பாக ஆறுதல் அடைவீர்கள் என்பது உறுதி..

= = = = = =